20.9.2024
ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**மக்களுக்கு அதிக நீர் வழங்குவதற்கான நீர்க்குழாய் திட்டங்களுக்கு ரிம189 மில்லியன் நிதி**

- **சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பட்டர்வொர்த் (செபராங் பிறை) வரையிலான புதிய 13.0கிமீ x 1.8மீ நீர்க்குழாய் திட்டத்திற்கு ரிம128 மில்லியன்.**

- **மெக்கலம் பகுதியில் இருந்து புக்கிட் டும்பார் நீர்த்தேக்கம் மற்றும் பம்பிங் ஸ்டேஷன் நிலையத்திற்கு (பினாங்கு தீவு) புதிய 3.9கிமீ x 1.8மீ நீர்க்குழாய் திட்டத்திற்கு ரிம44 மில்லியன்.**

- **சுங்கை பிறை ஆறு-கடக்கும் நீர்க்குழாய் திட்டத்திற்காக ரிம17 மில்லியன் (செபராங் பிறை).**

பினாங்கு, 20.9.2024: பினாங்கில் உள்ள மக்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு அதிக நீரை வழங்குவதற்காக அடுத்த 2 ஆண்டுகளில் 3 பெரிய நீர்க்குழாய் திட்டங்களை முடிப்பதில் PBAPP கவனம் செலுத்தும்.

பினாங்கு முதலமைச்சர் மேதகு சாவ் கொன் இயோவ் இன்று சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் (WTP) தொகுப்பு 12A-ஐ அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கிறார். தொகுப்பு 12A செயல்பாட்டின் மூலம், பினாங்கின் ஒட்டுமொத்த அதிகபட்ச நீர் சுத்திகரிப்பு திறனை 114 MLD இல், அதாவது1,612 MLD லிருந்து 1,726 MLD ஆக உயர்த்தியுள்ளோம்.

கூடுதலான நீர் சுத்திகரிப்பு திறன் கைவசம் இருப்பதால், PBAPP இப்போது வாடிக்கையாளர்களுக்கு அதிக சுத்திகரிக்கப்பட்ட நீரை

வழங்குவதற்காக பினாங்கின் நீர் விநியோக வலையமைப்பை அல்லது குழாய் வலையமைப்பு) மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது .

அதன்படி, PBAPP 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் 3 பெரிய குழாய் திட்டங்களை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தும்:

- சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பட்டர்வொர்த் வரை, செபராங் பிறையில் ஒரு புதிய 13.0கிமீ x 1.8மீ நீர்க்குழாய்;
- பினாங்கு தீவில் புதிய 3.9கிமீ x 1.8மீ நீர்க்குழாய், மெக்கல்லம் பகுதியிலிருந்து புக்கிட் டும்பார் நீர்த்தேக்கம் மற்றும் பம்பிங் ஸ்டேஷன் வளாகம் வரை; மற்றும்
- செபராங் பிறையில் சுங்கை பிறை ஆறு-கடக்கும் நீர்க்குழாய் திட்டம்.

PBAPP இந்த 3 திட்டங்களையும் சுமார் ரிம189 மில்லியன் முதலீட்டில் மேற்கொள்கிறது. 3 திட்டங்களும் 2025 அல்லது 2026க்குள் முடிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டம் இயக்கப்படும் போது, பினாங்கு மாநிலம் முழுவதும் உள்ள 465,000 நீர்ப் பயனீட்டாளருக்கு சுங்கை டுவா WTP இலிருந்து கூடுதலான நீர் அழுத்தத்தில் PBAPP அதிக நீரை விநியோகிக்க இந்த நீர்க்குழாய் அனுமதிக்கும்.

மேலும், பினாங்கின் அனைத்து 5 மாவட்டங்களிலும் உள்ள 689,786 பதிவுசெய்யப்பட்ட நீர் பயனீட்டாளர்களில் 67.4% நீர் விநியோக சேவைகளை மேம்படுத்த குழாய்த்திட்டங்கள் உதவும்: வடக்கு செபராங் பிறை, மத்திய செபராங் பிறை, தென் செபராங் பிறை, தென்மேற்கு மாவட்டம் மற்றும் வடகிழக்கு மாவட்டம் ஆகியவை உள்ளடங்கும்.

**புதிய ரிம120 மில்லியன் EMD நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP)**

2025 ஆம் ஆண்டில், மத்திய செபராங் பிறையில் (SPT) விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையின் (EMD) வளாகத்தில் புதிய 114 MLD நீர் சுத்திகரிப்பு நிலைய மேம்பாட்டுத் திட்டத்தை PBAPP மேற்கொள்ளும்.

மத்திய செபராங் பிறையில் சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்ய தினசரி அடிப்படையில் EMD இன் இருப்புகளில் சிலவற்றைச் சுத்திகரிக்க ஆலோசிக்கப்படுகிறது.

ரிம120 மில்லியன் EMD WTP SPT இல் நீர் சேவைகளை மேம்படுத்தும். இயங்கும் போது, சுங்கை டுவா WTP இலிருந்து SPTக்கு குறைவான நீரையும், செபராங் பிறையில் உள்ள மற்ற பகுதிகளுக்கு அதிக நீரையும் செலுத்த PBAPP-ஐ அனுமதிக்கும்.

**WCP 2030-ஐ திட்டமிடப்பட்ட நேரத்தில் முடிப்போம்**

நீர் விநியோக பொறியியல் அடிப்படையில், PBAPP அதன் நீர் விநியோக தற்செயல் திட்டம் 2030 (WCP 2030) இல் அனைத்து 8 திட்டங்களையும் திட்டமிடப்பட்ட நேரத்தில் முடிக்க முன்னுரிமை அளிக்கிறது. 2024, செப்டம்பர் நிலவரப்படி, PBAPP 2 திட்டங்களை வெற்றிகரமாக முடித்துள்ளது: புக்கிட் பஞ்சோரில் 10 MLD DAF தொகுதி மற்றும் சுங்கை டுவா WTP தொகுப்பு 12A ஆகிவற்றில் அடங்கும்.

3வது, 4வது மற்றும் 5வது WCP 2030 திட்டங்கள் செபராங் பிறையில் 13.0km x 1.8m குழாய், பினாங்கு தீவில் 3.9கீ.மி குழாய் மற்றும் புதிய EMD WTP ஆகியவை அடங்கும்.

PBAPP WCP 2030 இலக்கை அடைய நிர்ணயிக்கப்பட்ட அட்டவணை அடிப்படையில் பணியை மேற்கொள்கிறது.

நன்றி.

---


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : syarifah@pba.com.my